தமிழ்ப் பல்கலைக் கழகச்
செய்தி மலர்

மலர்:6 திருவள்ளுவர் ஆண்டு 2018- ஐப்பசி 28 -14-11-87 இதழ்:8

தமிழ்ப் பல்கலைக் கழக ஆறாவது ஆண்டு விழா

தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் ஆறாவது ஆண்டுவிழா 1987 நவம்பர் 28,29,30 ஆகிய நாள்களில் தமிழ்ப் பல்கலைக் கழக அரண்மனை வளாகத்தில் சிறப்பாகக் கொண்டாடப்படவிருக்கிறது.

முதல்நாள் 28-11-1987 அன்றுமாலை 5 மணியில் பல்கலைக் கழகப் பன்முக வளர்ச்சி பற்றிய கண்காட்சியைத் தஞ்சை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு மா.இராமு, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்துப் பேசுவார்கள். இந்நிகழ்ச்சிக்குத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் ச.அகத்தியலிங்கம் அவர்கள் தலைமை வகிப்பார்கள்.

இரண்டாம் நாள் 29-11-1987 ஞாயிறு மாலை 5 மணியில் மகாகவிபாரதியார் கருத்தரங்கைத் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் துவக்கி வைத்துப் பேசுவார்கள்.

மூன்றாம் நாள் 30-11-1987 திங்கள் மாலை 5 மணியில் ஆறாவது ஆண்டு விழாப் பேருரை நடைபெறும்.

மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. சி.பொன்னையன் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்துத் தலைமைப் பேருரை ஆற்றுவார்கள்.

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.இராம. வீரப்பன் அவர்கள் பல்கலைக்கழக நூல்களை வெளியிட்டு விழாப் பேருரை ஆற்றுவார்கள்.

பல்கலைக் கழக மானியக்குழுத் துணைத்தலைவர் திரு கே. சச்சிதானந்தமூர்த்தி அவர்கள் தமிழ்ப் பல்கலைக் கழகக் கணிப்பொறி மையத்திற்குப் பல்கலைக் கழக மானியக்குழு நல்கையில் உரு.8இலட்சம் விலையில்வாங்கப் பட்டுள்ள கணிப்பொறியினை இயக்கிவைத்துப் பேசுவார்கள்.

திருமதி வேதவதிதேவி சச்சிதானந்தமூர்த்தி அவர்கள் சிறந்த நூல்களுக்கான 5000 உருவா பரிசுகளை வழங்குவார்கள்.

தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் ச.அகத்தியலிங்கம் அவர்கள் வரவேற்புரை ஆற்றுவார்கள். பதிவாளர் முனைவர் பெ.சின்னையன் அவர்கள் நன்றியுரை வழங்குவார்கள்.

இம்மூன்று நாள்களிலும் இசை, நாடக நிகழ்ச்சிகள் நடைபெறும்.

– பெ. சின்னையன்,
பதிவாளர்.

தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் புதிய திட்டங்கள்

தமிழ்ப் பல்கலைக்கழகம் தாவர மருத்துவ வேதியல் பற்றி ஆராய்ச்சிகள் செய்து வருகிறது. மருத்துவ ஆய்வுக்காக 50 ஏக்கர் நிலப்பரப்பில் மூலிகைச் செடிகளை வளர்க்கத் திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிறது.

தமிழ்ப் பல்கலைக்கழகப் புதியவளாகத்தில் மாதிரிப் பழத்தோட்டம் 50 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட உள்ளது. இதில் தமிழ் இலக்கியங்களில் காணப்படும் செடி, கொடி மரங்களைச் சேகரித்து வளர்க்கவும், தமிழ் நாட்டிலுள்ள பழமரங்களையும் மற்றபயன்தரும் மரங்களையும் வளர்க்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்ப் பல்கலைக் கழகப் புதியவளாகத்தில் பல்வேறு மாவட்ட அமைப்பிற்கிடையேயுள்ள பாதைகளைச் செப்பனிடவும் சாலைகளின் இரு மருங்கிலும் மரங்களை வளர்த்துச் சோலைகளை உருவாக்கவும் திட்டமிடப்பட்டு உள்ளது. இதற்கான பெருந்திட்டம் ஒன்று வரைந்து செயலாக்கப்பட்டு வருகிறது.

இப்புதிய திட்டங்களை நமது மாண்புமிகு துணைவேந்தர் முனைவர் ச.அகத்தியலிங்கம் அறிவித்துள்ளார்கள்.

– பெ.சின்னையன்,
பதிவாளர்.

இசைக் கருத்தரங்கு - தமிழ் இயலிசைப் புலவர்களின் படைப்புகள் (இருபதாம் நூற்றாண்டு)

" 'இசை' என்ற சொல் பல பொருளைக் கொண்டதாகும். இசை என்பது 'ஒலி' அல்லது 'சத்தம்' என மலைபடுகடாம் கூறுகிறது. தொல்காப்பியம் இசைக்குச் 'சொல்' எனப் பொருள் சுட்டுகிறது. இசை என்றால் புகழ் என்பதை 'ஈதல் இசைபட வாழ்தல்' என்ற திருக்குறள் வரி உணர்த்துகிறது. இசை என்பது பாட்டுஎன்ற பொருளில் வழங்குவதோடு வாய்ப் பாட்டுமட்டுமன்றி இசைக் கருவிகளால் எழுப்பப் படுகின்ற இசையையும் குறிக்கின்றது. இசை என்றால் 'இனிமை' என்பதை இலக்கியங்களில் காண்கிறோம். இசை என்பதில் அடங்கியுள்ள 'இசைதல்' 'இசைத்தல்' என்ற வினைச் சொற்கள் கட்டுப்படுத்துதல் என்ற பொருளில் மனிதனின் உள்ளத்தைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் இசைக்கு இருப்பதைக் குறிக்கின்றன"

—எனத் தமிழ்ப் பல்கலைக் கழக இசைத்துறை நடத்திய இசைக் கருத்தரங்கத் தொடக்கவிழாத் தலைமையுரையில் துணைவேந்தர் முனைவர் ச. அகத்தியலிங்கம் கூறினார்.



பல்கலைக் கழக மானியக் குழுவின் நல்கையுடன் இக் கருத்தரங்கு 28,29,30-10-87 ஆகிய மூன்றுநாள்கள் நடைபெற்றது. தொடக்கவிழா 28-10-87 முற்பகல் 10 மணியில் அரண்மனை வளாகக் கருத்தரங்க அறையில் நடைபெற்றது. துணைவேந்தர் ச. அகத்தியலிங்கம் தலைமை யுரையாற்றினார். இசைத்துறை மதிப்புறு பேராசிரியர் தாமரைத்திரு டாக்டர் மதுரை எஸ். சோமசுந்தரம் தொடக்கவுரையாற்றினார். இசைத்துறைத்தலைவரும் கருத் தரங்க இயக்குநருமான பேரா. து. ஆ. தனபாண்டியன் வரவேற்புரைத்தார். இசைத்துறை இணைப் பேராசிரியர் திருமதி ஞானா குலேந்திரன் தொடக்க விழா முடிவில் நன்றியுரைத்தார்.

28-10-87 இரவு 8 மணியளவில் தாமரைத்திரு டாக்டர் மதுரை எஸ். சோமசுந்தரம் குழுவினரின் இசை நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

இக் கருத்தரங்கு 6 அமர்வுகளாக நடைபெற்றது. மூன்று நாள் நிகழ்ச்சியிலும் 21 கட்டுரையாளர்கள் பல் வேறு தலைப்புகளில் தங்கள் கட்டுரைகளைப் படைத்தனர். கலந்துரையாடல்கள் நிகழ்ந்தன.

30-10-87 மாலை 4.30 மணியில் கருத்தரங்க நிறைவு விழா தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிவாளர் முனைவர் பெ. சின்னையன் தலைமையில் நிகழ்ந்தது. முனைவர் வி. பிரேமலதா (முதல்வர், சத்குரு சங்கீத சமாசம் இசைக் கல்லூரி, மதுரை) நிறைவுவிழா உரை நிகழ்த்தி னார். இசைத்துறை விரிவுரையாளர் முனைவர் (செல்வி) பி. எஸ். லோச்சன் நிறைவுவிழா வரவேற்புரையாற்ற, பேரா. து. ஆ. தனபாண்டியன் நன்றி நவின்றார்.

— இசைத்துறை.

அகராதிக் கலைக் கருத்தரங்கு

தமிழ்ப் பல்கலைக் கழகத் தொகுப்பியல் துறை 11, 12, 13-11-'87 ஆகிய மூன்றுநாள்களில் புதிய வளாக மொழிப்புலக் கருத்தரங்கக் கூடத்தில் அகராதிக் கலைக் கருத்தரங்கு ஒன்றை நிகழ்த்தியது.

பல்கலைக் கழக மானியக் குழுவின் நல்கையுடன் நிகழ்த்தப்பட்ட இக் கருத்தரங்கிற்குத் துணைவேந்தர் முனைவர் ச. அகத்தியலிங்கம் தலைமையுரை நல்கிச் சிறப்பித்தார். தமது உரையில் அவர் "அகராதி என்பது ஒரு மொழியின் வளத்தையும் அம்மொழி பேசும் மக்களின் வாழ்க்கை நிலையையும் பிரதிபலிக்கும் கண்ணாடி போன்ற தாகும்" எனக் கூறினார். தமிழ்மொழியில் பல அகராதி களை உருவாக்கத் தமிழ்ப் பல்கலைக் கழகம் முயன்று வருகிறது எனக் குறிப்பிட்டார்.

மைசூர் பல்கலைக் கழகப் பேராசிரியர் முனைவர் ஆர். ஏ. சிங் விழாச் சிறப்புரையும் தமிழ்ப் பல்கலைக் கழகச் சமூகவியல் துறைத் தலைவர் முனைவர் சீ. செ. தேக்கமலை விழாத் தொடக்கவுரையும் வழங்கினர். தமது உரையில் அவர் இந்தியாவில் இதுவரை பல்வேறு மொழி களில் வெளிவந்துள்ள அகராதிகள் பற்றியும், புதிய அகராதிகளை உருவாக்குவதில் ஆற்றவேண்டிய பணிகள் குறித்தும் விளக்கினார்.

6 அமர்வுகளாக நடந்த இக்கருத்தரங்கில் இந்தியா வின் பல பல்கலைக் கழகங்களிலும் மற்றும் ஆய்வுநிறுவனங் களிலும் ஆய்வு புரியும் 20 பேராளர்கள் கட்டுரை படித்தார்கள். சிறந்த முறையில் கலந்துரையாடல்கள் நிகழ்ந்தன.

தொடக்க விழாவில் தொகுப்பியல்துறைத்தலைவரும், கருத்தரங்க இயக்குநருமாகிய பேரா. தா. வே. வீராசாமி வரவேற்புரையாற்றினார். முனைவர் பெ. மாதையன், விரிவுரையாளர், நன்றிநவில விழாஇனிதே முடிவுற்றது.

— தொகுப்பியல் துறை.

அறிவியல் தமிழ் அமைப்புக் கருத்தரங்கு

தமிழ்ப் பல்கலைக் கழக அறிவியல் தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் 'அறிவியல் தமிழ் அமைப்பு'க் கருத்தரங்கம் புதிய வளாக மொழிப்புலக் கருத்தரங்க அறையில் 6, 7-11-'87 ஆகிய இரு நாள்களில் நடைபெற்றது.

தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் ச. அகத்தியலிங்கம் தலைமையேற்க, திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் ஆ. ஞானம் சிறப்புரையுடன் கருத்தரங்கம் தொடங்கியது. கருத்தரங்கு இயக்குநர் பேரா. இராம சுந்தரம் வரவேற்புரைத்தார்.

அறிவியல் ஆய்வில் பூக்கும் புதியகண்டுபிடிப்புக்களையும் அவற்றால் விளையும் பயன்களையும் கிராமப்புறமக்களிடம் எடுத்துச் சொல்வதே அறிவியல் தமிழ்த் துறையின் நோக்கம் என்றும் அவ்வாறு செய்தால்தான் தமிழகம் முன்னேறி வளரும் என்றும் அதற்காகவே இத்துறை தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது என்றும் துணைவேந்தர் ச. அகத்தியலிங்கம் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

நான்கு அமர்வுகளாகக் கருத்தரங்கம் நடைபெற்றது. முதல் மூன்று அமர்வுகளில் 'தமிழ்க் கலைச் சொல்லாக்க நெறிமுறைகள்', 'அறிவியல் தமிழ்க் கட்டமைப்பு', 'அறிவியல் இலக்கியத் தமிழாக்கம்' ஆகிய தலைப்புகளில் கட்டுரைகள் படிக்கப்பெற்றன. நான்காவது அமர்வில் 'அறிவியல் தமிழ் வளர்ச்சி' என்ற பொருளில் கலந்துரையாடல் நடைபெற்றது.

நிறைவில் முனைவர் சி. ஏசுதாசன் நன்றி நவின்றார்.

— அறிவியல் தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை.

உதகை கோத்தர் இன மக்களுக்கு வயது வந்தோர் கல்வி

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வயதுவந்தோர் கல்வித் துறையும் உதகை மலையினமக்கள் ஆய்வுமையமும் இணைந்து உதகையிலுள்ள கோத்தர் இன மக்களுக்கென வயது வந்தோர் கல்வி மையங்களைத் தொடங்கியுள்ளன. பல்கலைக் கழக மானியக் குழுவின் நல்கையால் நடத்தப்பெறும் 60 மையங்களில் 10 மையங்கள் கோத்தர்க்குக்கெனத் தொடங்கப்பட்டுள்ளன.

இம்மையங்களில் பயிற்றுவிப்போர் கோத்தர் இனத்தைச் சார்ந்தவர்கள். கோத்தர் மொழியிலேயே பயிற்றுவிப்பார்கள். எழுதுவதற்கு மட்டும் தமிழ் எழுத்துக்களைப் பயன்படுத்துவார்கள்.

இதன் பயிற்சி வகுப்பு 24, 25-10-87 உதகை மலையின மக்கள் ஆய்வுமையத்தில் நடைபெற்றது. தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் துணைப்பதிவாளரும் வயதுவந்தோர் கல்வித் துறையின் மதிப்புறு இயக்குநருமான திரு இரா. சுப்பராயலு பயிற்சியை நடத்திவைத்தார். 26-10-87 முதல் மையங்கள் செயற்பட்டு வருகின்றன.

எதிர்காலத்தில் உதகையிலுள்ள மற்ற மலையினமக்கள் பிரிவினருக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

— வயதுவந்தோர் கல்வித்துறை.

வருந்துகிறோம்

தமிழ்ப் பல்கலைக் கழகக் கட்டட உருவாக்கப்பொறியாளர் துறையில் பணியாற்றிய செயற்பாட்டுப் பொறியாளர் திரு எச். எம். பெல்லி 16-11-'87 காலை 6 மணியில் இயற்கை எய்தினார்.

அவர் மறைவு கருதி 16-11-'87 காலை தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் இரங்கற் கூட்டம் நிகழ்ந்தது. துணைவேந்தர் முனைவர் ச. அகத்தியலிங்கம் இரங்கல் உரை நிகழ்த்தினார். அன்னார் மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலும், அன்னார் குடும்பத்திற்கு உணர்வார்ந்த ஆறுதலும் தெரிவிக்கப்பட்டது.

திரு எச். எம். பெல்லி பழங்குடி மக்களில் படகர் இனத்தைச் சார்ந்தவர். உதகமண்டலத்தில் பிறந்தவர். 1984 பிப்ரவரியில் தமிழ்ப் பல்கலைக் கழகக் கட்டடப் பொறியாளர் பணியை ஏற்றார். அன்னார் எழில் தோற்றமுள்ள நூலகக் கட்டடத்தைச் சிறப்புடன் நிறைவேற்றினார். மகளிர் விடுதி, அலுவலகக் கட்டடம் முதலியவற்றின் கட்டுமானத்தைச் செயற்படுத்திவந்தார்.

தமிழிசை வரலாறு குறித்த நூல்கள்

'தமிழிசை வரலாறு' குறித்து ஐந்து தொகுதிகளும், 'தமிழர் ஆடலில் இசை' என்பதுபற்றி ஐந்து தொகுதிகளும், 'இலக்கியத்தில் இசை' என்பது பற்றி ஐந்து தொகுதிகளும் ஐந்தாண்டுக் காலத்தில் வெளியிடத் திட்டமிடப்பட்டுத் தமிழ்ப் பல்கலைக் கழகம் பணிகளை மேற்கொண்டுள்ளது.

தமிழ்ப் பல்கலைக் கழகச்

செய்தி மலர்

திங்களிதழ்

பதிவெண் 15033/87

இ.அ.அ. மட்டும்.

37) நிருவாக அதிகாரி
தஞ்சை மகாராசா சரபோசி
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர் - 613 001.
தமிழ்நாடு - இந்தியா.

தமிழ்க்கலை

தமிழ் 5, கலை 3 & 4 (செப்தம்பர், திசம்பர் '87)

இதில் இலங்கை, மலேசியா, மேற்கு மலேசியா, சிங்கப்பூர், பர்மா, ஆப்பிரிக்கா, தென்னாப்பிரிக்கா, பிரிட்டன், பிரித்தானிய நாடு, மொரீசியசு, சீசெல்சு நாடு, பிஜீத் தீவு, கயானா ஆகிய வெளிநாடுகளில் வாழும் தமிழர், வழங்கும் தமிழ்மொழி பற்றி அறிஞர்கள் எழுதியுள்ள பதின்மூன்று கட்டுரைகளும் ராபர்ட் பென் வாரன் - அமெரிக்க அரசவைக் கவிஞர் பற்றிய அறிமுக ஆய்வும் சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம் (முதலிரு தொகுதிகள்) பற்றிய மதிப்புரையும் இடம்பெற்றுள்ளன.

புதுமைச் செய்திகள் கொண்ட இம்முத்திங்கள் இதழ், தமிழ் ஆய்வாளர்க்கு இன்றியமையாதது.

களஞ்சிய வெளியீடுகள்

அறிவியற் களஞ்சியம்	தொகுதி-1	உரு.300/-
" "	தொகுதி-2	உரு.300/-
வாழ்வியற் களஞ்சியம்	தொகுதி-1	உரு.300/-
" "	தொகுதி-2	உரு.300/-
" "	தொகுதி-3	உரு.300/-
" "	தொகுதி-4	உரு.300/-
சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம்	தொகுதி-1	உரு.250/-
"	தொகுதி-2	உரு.250/-

கழிவு: 25% அஞ்சற் செலவு தனி.

உறுப்பினர் கட்டண விவரம்

செய்திமலர் / நியூஸ்புல்லட்டின்

ஓராண்டு	உரு. 5/-	$ 4
ஈராண்டு	உரு.10/-	$ 8
மூவாண்டு	உரு.12/-	$10

தமிழ்க்கலை / தமிழ் சிவிலிசேஷன்

தனியிதழ்	உரு. 15/-	$ 3
2 இணைப்பிதழ்	உரு. 30/-	$ 6
ஓராண்டு	உரு. 60/-	$15
ஐந்தாண்டு	உரு.240/-	$60

தமிழ்ப் பல்கலைக் கழக 6-வது ஆண்டு விழாவில் வெளியிடப்படும் புதிய வெளியீடுகள்

1. சங்க இலக்கியத் தாவரங்கள்
   - கு. சீநிவாசன்
2. திருவருட்பயனும் அருண்மொழித்திரட்டும் (ஆங்கில மொழிபெயர்ப்புடன்)
   - வ. ஆ. தேவசேனாபதி
3. உடல் நலம்
   - இராம. சுந்தரம்
4. தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் - தொகுதி-2
   - தமிழாக்கம்: க. இரத்னம்
5. சோழமண்டலத்து வரலாற்று நாயகர்களின் சிற்பங்களும் ஓவியங்களும்
   - குடவாயில் பாலசுப்பிரமணியன்
6. மரஇனப் பெயர்த் தொகுதி - தொகுதி-2
   - பெ. மாதையன்
   எச். சித்திரபுத்திரன்
7. வாழ்வியற் களஞ்சியம் - தொகுதி-5

பதிப்பாசிரியர்: இயக்குநர், பதிப்புத்துறை
அச்சு: தமிழ்ப் பல்கலைக் கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்-613 001.